DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 113 /2019**

**(CNR.No: TNTH06-000175 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : குழந்தை அந்தோணி | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :06.01.2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரும் மனு எண். ஐ.எ.457/2019 ல் எனது சொந்தான 2 வது லக்க சொத்து குறிப்பிட்டு அளவீடு செய்ய கோரியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் பாதையைப்பொறுத்துதான் வழக்கு தாக்கல் செய்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தை பார்த்து விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வடக்கு பக்கமுள்ள முள்வேலி யார் அமைத்தது என்றால் 2ம் பிரதிவாதி சேவியர் அமைத்தார். எனது சொத்திற்கு கிழக்கு மாலில் தென்வடலாக முள்வேலி எதுவும் இல்லை என்றால் சரியல்ல, நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் அவ்வாறு ஒரு முள்வேலி இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் அது தவறாகும்.

2) எங்கள் சொத்து கிரையம் பெற்ற நாள் முதல் தற்போது வரை காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். எங்கள் இடத்தில் கருவேலமரம் வளர்க்கிறோமா என்றால் இல்லை, 2ம் பிரதிவாதி இடத்தில் தான் கருவேல மரம் இருக்கிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எங்கள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில்

கருவேல மரத்திற்கு வடக்கு பக்கம் தென்வடலாக தொடர்ச்சியாக ரோடு வரை ஒரு பாதையிருந்தாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, கருவேல மரத்திற்கு தெற்கும் தொடர்ச்சியாக ஆரோக்கிய உடையார் இடம் வரை பாதை உள்ளது. நான் சொல்வது போல் மேற்படி பாதை கருவேல மரத்திற்கு தெற்கும் தொடர்ச்சியாக இருப்பதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அதுபற்றி ஞாபகமில்லை.

3) நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது சொத்திற்கான போக்குவரத்திற்கு முள்வேலி இடையூறாக இருப்பதாக எந்தொரு விபரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனது பிராதில் 3 வது பக்கம் 7 வது பாராவில் வாதி, பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட IJDEI என்ற பகுதியில் ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும் என்ற தீய எண்ணத்தில் வழக்குரை 3 வது லக்க சொத்தாக காட்டப்பட்டுள்ள உத்தேச வரைபடத்தில் IJ என்ற இடத்தில் கற்களை ஊன்றி வேலி போடுவதற்கு முற்பட்டுள்ளார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான், அவ்வாறு எந்த தேதியில் வேலி போட பிரதிவாதி முயற்சித்தார் என்று பிராதில் கூறப்படவில்லை என்றால் 15.06.2020 ம் தேதி முயற்சித்தார்.

4) அது குறித்து காவல் துறையில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன், ஆனால் தேதி ஞாபகமில்லை. (சாட்சி திரும்ப சொல்கின்றார் 15.06.2019 ம் தேதி பிரதிவாதி வேலி போட முயற்சித்தார்). வாசாஆ 6 ஆவணம் தான் நான் காவல்துறையில் கொடுத்த புகார் என்றால் சரிதான். அதில் IJ பகுதியில் பிரதிவாதி வேலி போட்டார் என்றும், எந்த தேதியில் வேலி போட்டார் என்றும் குறிப்பாக கூறிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், வாசாஆ 6 புகாரில் குறிப்பான விபரங்கள் எதுவும் கூறிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மனு மீது காவல்துறையினர் பிரதிவாதி மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. எனது புகார் மனு பொய்யானது என்பதால் தான் காவல்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5) காவல்துறையினர் சொல்லியதை பிரதிவாதி கேட்கவில்லை, அதுகுறித்து உயர் அதிகாரிகளிடம் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் தேனியில் காவல்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகார் விசாரணையிலும் பிரதிவாதி காவல்துறையினர் சொல்லியதை கேட்கவில்லை. வாசாஆ 6 புகார் மனுவில் காட்டப்பட்டுள்ள மனுதாரர் விலாசம் தான் எனது தாயாரின் குடியிருப்பு விலாசம் என்றால் சரிதான். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். வாசாஆ 5 வீட்டுவரி ரசீது யார் பெயர் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. தாவா சொத்து 2007 வருடம் முதல் தற்போது வரை காலியிடமாக உள்ளது என்றும், வாசாஆ 5 வீட்டுவரி ரசீது எனது தாயார் குடியிருந்த வீட்டிற்கான ரசீது என்றும் சொன்னால் சரியல்ல, வாசாஆ 5 ரசீது தாவா சொத்திற்குரியது தான்., மின் இணைப்பு பெறுவதற்காக வீட்டுவரி செலுத்தினேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ 6 ஆவணத்தில் எனது தாயார் தாவா சொத்தை எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று பொதுவாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

6) தாவா சொத்தையும், பிரதிவாதி சொத்தையும் பிரதிவாதியின் செலவு தொகையுடன் மீண்டும் அளவீடு செய்ய எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை, ஆனால் ஏற்கனவே அளவீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அளவீடு செய்யப்பட்டாலும், தாவா பாதையில் உள்ள முள்வேலி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளதா, அல்லது நான் கூறுவதுபோன்று பொதுப்பாதையில் உள்ளதா என்பதை கண்டறிய மீண்டும் ஆணையர் மூலம் அளவீடு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மீண்டும் ஆணையர் மூலம் அளவீடு செய்யப்பட்டால் எனது வழக்கு பொய்யானது என்று தெரிந்துவிடும் என்று அதற்கு ஆட்சேபனை செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளை குறிப்பாக மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

7) எனது சொத்திற்கு வடக்கு மாலில் யார் இடம் உள்ளது என்றால்

முன்னதாக ஜஸ்டீன் பிரபாகரன் இடமாக இருந்தது, தற்போது யார் இடம் என்று தெரியாது. ஜஸ்டீன் பிரபாகரன் எனது தாயாருக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள இடத்தினை பிச்சைஆரோக்கியமேரி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் தவறான சொத்து விபரத்துடன் வழக்கு மூலம் எதுவும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(ஓ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.